# 50ஆம் ஆண்டு பொன் விழாவில் மெக்னம்!



கோலாலம்பூர், ஜன. 11-

மெக்னம் தனது பொன் விழாவை நிறுவன அடையாளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் புதிய நிறுவன சின்னம் அறிமுகம், நாடு தழுவிய தனது கடைகளை மேம்படுத்துவதன் மூலம் கொண்டாடுகிறது.

மெக்னம் நிறுவனம் ஐம்பதாவது ஆண்டு விழாவை கோலாலம்பூரில் அமைந்துள்ள ஒரு விடுதியில் வெகு விமரிசையாக கொண்டாடியது.

மலேசியாவில் 4-இலக்க எண்கள் பந்தய விளையாட்டை (4டி) நடத்துவதற்கான உரிமம் வழங்கப்பட்ட முதல் தனியார் நிறுவனம் மெக்னம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விழாவில் 700க்கும் மேற்பட்ட வணிக நண்பர்கள், முகவர்கள் மற்றும் மெக்னம் தொடங்கப்பட்ட காலம் முதல் உடனிருக்கும் பலர் கலந்து கொண்டனர்.

மெக்னம் 1968 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, உள்ளூர், சர்வதேச நிலைகளில் பந்தய தொழில் துறைக்கான மகுடம் வகித்து வந்துள்ளது. 1988 ஆம் ஆண்டு, மலேசியாவில் முதன் முறையாக 4டி டிக்கெட் விற்பனையை கணினிமயமாக்கிய தன் மூலம் விரைவான, நேர்மையான மற்றும் நிலைத்தன்மையான சேவையை உறுதிப்படுத்தியது.

தொடர்ந்து 2009ஆம் ஆண்டு உலகத்திலேயே முதன்முதலாக 4டி பந்தயத்துடன் ஜேக்போட்டை இணைத்து 4டி ஜேக்போட் விளையாட்டை அறிமுகம் செய்தது. இது மலேசியாவில் மிகவும் பிரபலமான இரண்டாவது பந்தய விளையாட்டு மற்றும் பிரபலமான ஜேக்போட் விளையாட்டாக மாறியுள்ளது.

இந்த வெற்றியை தொடர்ந்து மெக்னம் நிறுவனம் 2014ஆம் ஆண்டில் ஜேக்போட் கோல்ட் மற்றும் 2016ஆம் ஆண்டில் பவர்பால் போன்ற ஜேக்போட் அம்சங்களை உள்ளடக்கிய பந்தய விளையாட்டுகளை அறிமுகம் செய்தது.

கடந்த 50 ஆண்டுகளின் சாதனைகளை திருப்பி பார்க்கும் பொழுது இதற்கு பக்கபலமாக அமைந்த அசைக்க முடியாத விசுவாசம், தொடர் ஆதரவு நல்கும் வாடிக்கையாளர்கள், நாடு தழுவிய முகவர்கள் மற்றும் வணிக நண்பர்களுக்கு மெக்னமின் தலைமை செயல் அதிகாரி டத்தோ லாரன்ஸ் லிம் சுவி லின் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

அதே சமயத்தில், மெக்னமின் இலக்குகளை வாடிக்கையாளர்களுக்கும் சமுதாயத்திற்கும் சரியாக சென்று சேர்க்க அயராது உழைத்த சக ஊழியர்களையும் பாராட்டினார்.

50 வருட நிறைவை கொண்டாடும் இந்த தருணம் அடுத்து மெக்னமின் முன்னேற்றத்திற்கு தகுந்த, நிலையான திட்டங்களை தீட்ட ஒரு வாய்ப்பை நமக்கு அளித்திருக்கிறது என்று அவர் கூறினார்.

Malaysia Nanban 11/1/2018